*ச. வ. பி. 15/2014*

**2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டம்**

*இரண்டாயிரத்துப்பதின்நான்காம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 58 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 45 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

சஜித் பிரேமதாச,
வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை
அமைச்சர்.

கொழும்பு,
2018, சனவரி 03.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2017 ஆம் ஆண்டின் நிர்மாணத்தொழில் அபிவிருத்தி (தொழில்நுட்ப கணக்காய்வு நடவடிக்கைமுறை மற்றும் கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஏதேனும் அடையாளங்காணப்பட்ட நிர்மாண வேலையின் தொழில்நுட்பக் கணக்காய்வுக்கான நடவடிக்கைமுறையானது இதற்கான முதலாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

3. அத்தகைய தொழில்நுட்பக் கணக்காய்வுக்கான கட்டணங்கள் இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான வீதங்களில் அறவிடப்படுதல் வேண்டும்.

4. இவ்வொழுங்குவிதிகளில் -

"அடையாளங்காணப்பட்ட நிர்மாண வேலை" ஆனது, 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தில் உள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"தொழில்நுட்பக் கணக்காய்வு" ஆனது 2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தில் உள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**முதலாம் அட்டவணை**

**ஏதேனும் அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலையின் தொழில்நுட்பக் கணக்காய்வுக்கான நடவடிக்கை முறை**

1. தொழில்நுட்பக் கணக்காய்வுக்கான வேண்டுகோளானது அதிகாரசபையில் கிடைக்கக்கூடிய தொழில்நுட்ப கணக்காய்வுக்கான விண்ணப்படிவத்தில் அதிகார சபைக்கு அனுப்பப்படல் வேண்டும்.

2. அதிகார சபையானது, வேண்டுகோளில் குறிப்பீடு செய்யப்பட்ட வேலையை தொழில்நுட்ப ரீதியாக கணக்காய்வு செய்யத்தக்கதாக இருந்தாலுஞ்சரி இல்லாவிட்டாலுஞ்சரி, நிச்சயித்தல் வேண்டும். அவ்வேண்டுகோளைப் பெற்றுக் கொண்டதிலிருந்து 14 வேலை நாட்களினுள் எழுத்தில் விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

3. அதிகார சபையானது, விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து 14 நாட்களினுள் அதிகார சபையினால் பேணப்படும் தரமுகாமைத்துவக் கணக்காய்வாளர்களின் பதிவேட்டில் நிரல்படுத்தப்பட்டிருக்கின்ற ஆட்களுக்கிடையேயிருந்து தெரிவு செய்யப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வாளர்/கணக்காய்வாளர்களை நியமித்தல் வேண்டும்.

4. தரமுகாமைத்துவக் கணக்காய்வாளர்கள் கணக்காய்வுக்கான விண்ணப்பத்தை ஆய்வு செய்தல் வேண்டும் என்பதுடன் கணக்காய்வு நோக்கெல்லை கூற்று மற்றும் ஆகுசெலவு முன்மொழிவு என்பவற்றை தயாரித்தலும் வேண்டும்.

5. பெறப்பட்ட நோக்கெல்லை கூற்று மற்றும் ஆகுசெலவு முன்மொழிவு என்பன அதிகார சபையினால் நியமிக்கப்பட்ட மதிப்பீட்டுக் குழாம் ஒன்றினால் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அவசியமான மீளாய்வுகள் ஏதேனும் இருப்பின் அதனை மேற்கொண்ட பின்னர் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்படுதலும் வேண்டும்.

6. அதிகார சபையானது விண்ணப்பதாரியுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ளுதல் வேண்டும். இது தொழில்நுட்பக் கணக்காய்வின் நோக்கெல்லை, ஆகுசெலவு மற்றும் காலப்பகுதியையும் அதனுடன் இரு திறத்தவர்களின் பொறுப்புக்களையும் கட்டுப்பாடுகளையும் உள்ளடக்கும்.

7. அளவையும், சிக்கலான தன்மையையும் பொறுத்து கணக்காய்வுக் குழுவானது ஆகக்கூடியது மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருக்கலாம்.

8. இது இரண்டு அல்லது மூன்று உறுப்பினர் கொண்ட கணக்காய்வுக் குழுவாயின், அதிகார சபையானது தெரிவு செய்யப்பட்ட தரமுகாமைத்துவக் கணக்காய்வாளர்களுடனான கலந்தாலோசனையுடன் குழுவின் தலைவரை முடிவு செய்தல் வேண்டும். அதிகார சபையின் முடிவு ஆனது இறுதியானதாகவும் பிணிப்பதாகவும் இருத்தல் வேண்டும்.

9. தரமுகாமைத்துவக் கணக்காய்வாளர்களை மாற்றீடு செய்தலானது தரமுகாமைத்துவக் கணக்காய்வாளர்கள் புரிவதற்கு இயலாதுள்ளவர்களாக அல்லது பொருத்தமற்றவர்கள் என கண்டுபிடிக்கும் நிகழ்வு அதிகார சபையின் தற்றுணிபில் இருத்தல் வேண்டும்.

10. எவரேனும் தரமுகாமைத்துவக் கணக்காய்வாளர்கள் ஏதேனும் துர்நடத்தைக்கு குற்றவாளியாகக் காணப்படின் உடனடியாக அல்லது அதிகார சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு அக்கறை முரண்பாடு போன்ற வேறு காரணங்களுக்காக 14 வேலை நாட்களுக்கு முன்னரான அறிவித்தலுடன் அவரை சேவையிலிருந்து முடிவுறுத்துவற்கு அதிகார சபையானது உரிமையை கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய விடயங்களில் தரமுகாமைத்துவக் கணக்காய்வாளரினால் நிறைவேற்றப்படும் வேலைகள் ஏற்றுக்கொள்ளப்படாது.

11. நீடித்த காலப்பகுதி ஒன்றிற்கு சுகவீனமாக உள்ளமை காரணமாக அல்லது ஏதேனும் ஏற்கத்தக்க காரணத்தின்கீழ் கணக்காய்விலிருந்து தரமுகாமைத்துவக் கணக்காய்வாளர் பின்வாங்கும் பட்சத்தில், அத்தகைய தரமுகாமைத்துவக் கணக்காய்வாளினால் ஏலவே நிறைவேற்றப்பட்ட வேலை செல்லுபடியானதாக கருத்திற் கொள்ளப்படுவதுடன் அதிகார சபையானது விடயத்திற்கேற்ப மாற்றீடொன்றாக இன்னொரு ஆளை நியமிப்பதற்கு முடிவு எடுக்கலாம் அல்லது முடிவெடுக்காது விடலாம்.

12. விண்ணப்பதாரியும் தொடர்புபட்ட திறத்தவர்களும் தரமுகாமைத்துவக் கணக்காய்வாளர்களினால் தேவைப்படுத்தப்படும் எல்லாத் தகவலையும் கொடுத்துதவுதல் வேண்டும்.

13. தரமுகாமைத்துவக் கணக்காய்வாளர்கள் தொழில்நுட்பக் கணக்காய்வு நோக்கங்களுக்காக தேவைப்படுத்தப்பட்டவாறு அடையாளம் காணப்பட்ட நிர்மாண வேலை மற்றும் வேறு அமைவிடங்கள் என்பவற்றை பார்வையிடலாம். அதிகாரசபையினால் அத்தகைய எழுத்திலான அறிவுறுத்தல்களை பெற்றுக்கொண்டதன் மேல் வேலைத் தளங்கள் மற்றும் அத்தகைய வேறு அமைவிடங்களைக் கொண்டுள்ள திறத்தவர், தொழில்நுட்ப கணக்காய்வினை நிறைவேற்றுவதற்கு அத்தகைய வளவுகளினுள் நுழைவதற்கு அதிகார சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களை அனுமதித்தல் வேண்டும்.

14. தரமுகாமைத்துவக் கணக்காய்வாளர்கள் சத்தியக்கடதாசி அல்லது வேறு ஏதேனும் ஏற்றுக்கொள்ளப்படற்பாலதான வழிகள் மூலம் வாய்மொழி மூலமான, எழுத்திலான சான்றைப்பெறுவதற்கு அடையாளங்காணப்பட்ட நிர்மாண வேலையுடன் இணைந்துள்ள எவரேனும் திறத்தவரை அதிகார சபை மூலம் அழைக்கலாம்.

15. தொழில்நுட்ப கணக்காய்வு அறிக்கையானது அத்தியாயவசியமாக வழங்கும் திகதி, அறிமுகம் நிறைவேற்றுச் சுருக்கம், தொழில்நுட்பக் கணக்காய்வின் நோக்கெல்லை, செய்யப்பட்ட தொழில்நுட்பக்கணக்காய்வின் விபரமான விபரணங்கள், ஏற்புடையற்பாலதான பகுப்பாய்வு முறைகள், செவ்வை பார்த்து இணங்கியொழுகுவதற்கான மற்றும்/அல்லது இசைந்தொழுகுதலுக்கான குறிப்பீடு செய்யப்பட்ட நியமங்கள், விதப்புரைகள், முடிவுகள் என்பவற்றை உள்ளடக்கும். இது அறிக்கையை ஆதாரப்படுத்தும் வகையில் குறிப்பீடு செய்யப்பட்ட இயைபான எல்லா ஆவணங்களினதும் கடிதத் தொடர்களினதும் பிரதிகளை உள்ளடக்குதலும் வேண்டும்.

இரண்டாம் அட்டவணை

**தொழில்நுட்ப கணக்காய்வின் கட்டணங்களை அறவிடுவதற்கான வீதங்கள்**

| விடய விபரணம் | தொகை (ரூபா) |
|---|---|
| 1. தொழில்நுட்ப கணக்காய்வைக் கோருவதற்கான விண்ணப்பக் கட்டணம் | 5,000.00 |
| 2. தொழில்நுட்பக் கணக்காய்வை மேற்கொண்டு செய்வதற்கான முற்பணக் கொடுப்பனவு | ஆகுசெலவு மதிப்பீட்டின் 50% சதவீதம் |
| 3. அறிக்கையை வழங்குவதற்கு முன்னர் செய்யப்பட வேண்டிய கொடுப்பனவு | ஆகுசெலவு மதிப்பீட்டின் 50% சதவீதம் |

02- 649/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.